செய்தி வெளியீடு எண்: 1059 நாள்: **02.12.2010**

# தமிழகத்தில் தொடர் வடகிழக்குப் பருவமழையினால் ஏற்பட்டுள்ள சேதம் மற்றும் நிவாரண உதவிகள்

## முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் ந. சுந்தரதேவன் இ.ஆ.ப., தகவல்

தமிழகத்தில் நவம்பர் மாதத் தொடக்கத்திலிருந்து வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. குறிப்பாக, தென் மாவட்டங்களில் கடந்த ஒரு வார காலமாகப் பெய்து வரும் கனமழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 25.11.2010 மற்றும் 29.11.2010 ஆகிய நாட்களில் தொடர் ஆய்வுகளை மேற்கொண்டார்கள்.

போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், தங்குமிடம் ஆகியவற்றிற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென்றும், நிவாரண உதவிகளைச் சற்றும் தாமதம் இல்லாமல் உரியவர்களுக்கு வழங்கிட ஆவன செய்திட வேண்டுமென்றும் உத்தரவிட்டு உள்ளார்கள்.

இன்று (2.10.2010) காலை 8.30 மணி வரையில், மாநிலத்தின் சராசரி மழையின் அளவு 28.58 மில்லி மீட்டர் ஆகும். அதிகபட்சமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 83.36 மில்லி மீட்டரும், கடலூர் மாவட்டத்தில் 75.87 மில்லி மீட்டரும், விழுப்புரம் மாவட்டத்தில் 69.11 மில்லி மீட்டரும், திருவாரூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் சராசரியாக 58 மில்லி மீட்டரும் மழை பெய்துள்ளது. குறிப்பாக, திருநெல்வேலி பாபநாசத்தில் 170 மில்லி மீட்டரும், தூத்துக்குடி குலசேகரப் பட்டினத்தில் 158 மில்லி மீட்டரும், கடலூர் கோத்தவாச்சேரியில் 130 மில்லி மீட்டரும், மாமல்லபுரத்தில் 122 மில்லி மீட்டரும், உத்திரமேரூரில் 116 மில்லி மீட்டரும், பெரம்பலூர் தளுதலையில் 115 மில்லி மீட்டரும், பண்ருட்டியில் 115 மில்லி மீட்டரும், பரங்கிப்பேட்டையில் 112 மில்லி மீட்டரும், விழுப்புரம் கள்ளக்குறிச்சியில் 110 மில்லி மீட்டரும், அதிகபட்சமாக மழை பெய்துள்ளது. மேலும் மாநிலம் முழுதும் 35 க்கும் மேற்பட்ட இடங்களில் குறைந்த பட்சமாக 6 சென்டி மீட்டர் முதல் 9 சென்டி மீட்டர் வரையில் மழை பதிவாகியுள்ளது.

நாளதுவரையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 123 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் ஆண்கள் 58, பெண்கள் 35, குழந்தைகள் 30. உயிரிழந்தோரின் குடும்பத்தினர்களுக்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சமும், மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ளபடி, முதலமைச்சரின் பொது நிவாரண

நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ஆக இரண்டு இலட்சம் ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

இத்தொடர் மழையின் காரணமாக இறந்துள்ள 612 கால்நடைகளில் ஏறத்தாழ 390 கால்நடைகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், சேதமடைந்துள்ள 17,417 குடிசைகள் மற்றும் வீடுகளில், பகுதியாக சேதமடைந்தவை 14,447, முழுமையாக சேதமடைந்தவை 3,000 ஆகும். அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி அறிவித்துள்ள நிவாரண உதவியாக, பகுதியாக சேதமடைந்தவைகளுக்கு தலா 2,500 ரூபாயும், முழுமையாக சேதமடைந்தவைகளுக்கு தலா ரூபாய் 5 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

நாளதுவரையில், இம்மழையின் காரணமாக உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவித்தொகை, கால்நடைகள் இழப்பீட்டுத் தொகை மற்றும் சேதமடைந்து வீடுகள் மற்றும் குடிசைகளுக்கு மொத்த உதவித் தொகையாக ஒரு கோடியே 31 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

வெளியீடு:—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9